**கிராமின் கிருஷி மவுசம் சேவா**

இந்திய வானிலை துறை

தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம்

கோவை, தமிழ்நாடு

# அக்ரோமெட் ஆலோசனை புல்லட்டின்

**தேதி : 30-01-2024**

**திருவள்ளூர்(தமிழ்நாடு) வானிலை முன்னறிவிப்பு - அன்று வெளியிடப்பட்ட :2024-01-30 ( அடுத்த 5 நாட்களில் 8:30 IST வரை செல்லுபடியாகும்)**

| வானிலை காரணி | 2024-01-31 | 2024-02-01 | 2024-02-02 | 2024-02-03 | 2024-02-04 |
|---|---|---|---|---|---|
| மழையளவு (மி.மீ ) | 0.0 | 0.0 | 1.0 | 0.0 | 0.0 |
| அதிக பட்ச வெப்பநிலை ( oசெ ) | 31.0 | 32.0 | 32.0 | 32.0 | 33.0 |
| குறைந்த பட்ச வெப்பநிலை (o செ ) | 23.0 | 24.0 | 24.0 | 24.0 | 24.0 |
| அதிக பட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 90 | 90 | 90 | 90 | 90 |
| குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 50 | 50 | 50 | 50 | 40 |
| காற்றின் வேகம் (கி.மீ./மணி ) | 8 | 10 | 10 | 10 | 8 |
| காற்றின் திசை (கோணம்) | 110 | 160 | 160 | 140 | 140 |
| மேக மூட்டம் (ஆக்டா) | 4 | 3 | 3 | 4 | 4 |

### வானிலை சுருக்கம் / எச்சரிக்கை:

பிப்ரவரி 2-ஆம் தேதி அன்று மிக லேசான மழைப்பொழிவு எதிர் பார்க்கலாம் ; அதிகபட்ச வெப்பநிலை 31.0°C-33.0°C ஆகவும் மற்றும் குறைந்தபட்ச வெப்பநிலை 23.0°C-24.0°C ஆகவும் இருக்கலாம்; காற்றின் ஈரப்பதம் 40-90% வரை எதிர்பார்க்கப்படுகிறது; காற்றின் வேகம் மணிக்கு 8.0-10.0 கி.மீ வரை இருக்கலாம்; காற்றின் திசை தெற்கு தென்கிழக்கிலிருந்து வீசக்கூடும்.

### பொது ஆலோசனை:

04.02.2024 முதல் 10.02.2024 வரை தமிழ்நாட்டில் மழைப்பொழிவு இயல்பை விட குறைவாகவும், அதிகபட்ச வெப்பநிலை மற்றும் குறைந்தபட்ச வெப்பநிலை இயல்பு நிலையில் பதிவாகக்கூடும்.

### குறுஞ்செய்தி :

விவசாயிகள் மண்ணின் ஈரத்தன்மையை பொறுத்துத் பயிர்களுக்கு நீர் பாசனம் மேற்கொள்ளவும்.

### பயிர் குறிப்பிட்ட ஆலோசனை:

| பயிர் | பயிர் குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| நெல் | தற்போது நிலவும் வானிலை காரணமாக நெற்பயிரில் பின்வரும் பூச்சி மற்றும் நோய் தாக்கம் காணப்படலாம்;1. இலைப்பேன்- நாற்றங்கால் (20 சென்ட்) தியாமெதோக்ஸாம் 25% WG 4 கிராம் என்ற வீதம் 40 லிட்டர் தண்ணிரில் கலந்து தெளிக்கவும்; 2).தண்டுத்துளைப்பான்- ஏக்கருக்கு அசாடிராக்டின் 0.03% 400 மில்லி லிட்டர் வீதம் அல்லது ஏக்கருக்கு ப்ளூபெண்டியாமைடு 20% WP 50 கிராம் என்ற வீதம் 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கவும்; 3). இலை சுருட்டுப்புழு தாக்கம் தென்பட்டால் கட்டுப்படுத்த ஏக்கருக்கு குளோரான்ட்ரானிலிப்ரோல் 18.5% SC 60 கிராம் வீதம் அல்லது ஏக்கருக்கு அசாடிராக்ட்டின் 0.03% 400 மில்லி லிட்டர் என்ற வீதம் 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கவும்; 4.செம்புள்ளி நோய் தாக்கம் தென்பட்டால் கட்டுப்படுத்த ஏக்கருக்கு ப்ரோபிநெப் 70% WP 600-800 கிராம் அல்லது ஏக்கருக்கு ப்ரோபிநெப் 54.2% மற்றும் ட்ரைசைக்ளோசோல் 15 % WP கலந்து 500 கிராம் என்ற வீதம் 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கவும். |
| உளுந்து | உளுந்து பயிறு- விதை நேர்த்தி- விதைப்பிற்கு முன் ஒரு கிலோ விதைக்கு டிரைக்கோ டெர்மா விரிடி 4 கிராம் வீதம் அல்லது ஒரு கிலோ விதைக்கு சூடோமோனாஸ் ஃப்ளோரசன்ஸ் 10 கிராம் வீதம் கலந்து விதை நேர்த்தி செய்து விதைக்கவும். |
| நிலக்கடலை | நிலக்கடலை- வளர்ச்சி நிலை- நிலவும் வானிலை காரணமாக நிலக்கடலை பயிர்களில் முன் பருவ இலைப்புள்ளி நோய் தாக்கம் காணப்பட்டால் கட்டுப்படுத்த ஏக்கருக்கு கார்பன்டாசிம் 200 கிராம் அல்லது ஏக்கருக்கு குளோரோதலோனில் 400 கிராம் வீதம் 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கலாம். |

## தோட்டக்கலை குறிப்பிட்ட ஆலோசனை:

| தோட்டக்கலை | தோட்டக்கலை குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| மிளகாய் | நிலவும் வானிலை காரணமாக மிளகாய் பயிர்களில் இலைப்பேன் தாக்கம் தாக்கம் காணப்பட்டால் கட்டுப்படுத்த இமிடகிலோபிரிட் 17.8% SL 10 லிட்டர் தண்ணீருக்கு 3 மில்லி லிட்டர் வீதம் தண்ணீரில் கலந்து தெளிக்கலாம் அல்லது பைப்ரோனில் 5% SC 0.6 1 லிட்டர் தண்ணீருக்கு 1.5 மில்லி லிட்டர் வீதம் தண்ணீரில் கலந்து தெளிக்கலாம். |